**கோவை மண்டலக் கல்லூரிக்கல்வி இணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்**

**ஆணை வழங்குபவர் : முனைவர். நா.செண்பகலெட்சுமி,** எம்.ஏ., எம்.ஏ., எம்.எஸ்சி.,
பி.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.,(நெட்)

ந.க.எண்.6844/அ1/2023 நாள். 07.08.2025

பொருள் : கல்லூரிக் கல்வித் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கல்லூரிக் கல்வித் துறைக்கு இளநிலை உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV மூலம் நேரடி நியமனம் – திரு.து.குணசேகரன், இளநிலை உதவியாளராக தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடித எண்.1926/PSD-D2/2023 நாள் : 04.09.2023.
2. சென்னை, கல்லூரிக் கல்வி இயக்குநர்(மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.35681/பி1/2023 நாள் : 23.11.2023.
3. இவ்வலுவலகச் செயல்முறைகள் ந.க.எண்.6843/அ1/2023 நாள் : 24.11.2023.
4. சென்னை, கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.TNDCE/4777/2025-B1 நாள் : 26.06.2025.

-----

ஆணை:

பார்வை(1)இல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடிதத்தின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி–IV தேர்வு மூலம் கல்லூரிக் கல்வித் துறைக்கு இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட திரு.து.குணசேகரன் என்பாரை, பார்வை(2)இல் காணும் சென்னை, கல்லூரிக் கல்வி இயக்குநர்(மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகளில் இவ்வலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டது.

பார்வை(3)இல் காணும் இவ்வலுவலகச் செயல்முறைகளில் அன்னாரை இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது. திரு.து.குணசேகரன் என்பார் 24.11.2023 முற்பகல் முதல் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்துள்ளார். பார்வை(4)இல் காணும் சென்னை, கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடிதத்தில் இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர்கள் / சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் (நிலை–III) ஆகியோருக்கு இணை இயக்குநர்கள் / கல்லூரி முதல்வர்களே நியமன அதிகாரி என்பதால் இணை இயக்குநர்கள் / கல்லூரி முதல்வர்கள் அளவிலேயே நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

..2

திரு.து.குணசேகரன் என்பாரது கல்வித்தகுதி சான்றிதழ்களின் உண்மைத் தன்மை பெறப்பட்டு பணிப்பதிவேடு பக்கம் எண்.06இல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.து.குணசேகரன் என்பாரது பணியினை, அன்னார் பணியில் சேர்ந்த நாளான 24.11.2023 முற்பகல் முதல் கீழ்க்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறை செய்து ஆணை வழங்கலாகிறது.

**"இப்பணி வரன்முறை ஒருங்கிணைந்த குடிமைப் பணித் தேர்வுகள் – தொகுதி IV பணிநியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்பட உள்ள இறுதி தீர்ப்பாணைக்குட்பட்டது"**

கல்லூரிக்கல்வி இணை இயக்குநர்,
கோவை மண்டலம், கோவை –18.

பெறுநர்:

திரு.து.குணசேகரன்,
இளநிலை உதவியாளர்,
கல்லூரிக் கல்வி இணை இயக்ககம், கோவை மண்டலம், கோவை–18.

நகல்:

கல்லூரிக் கல்வி ஆணையர்,
கல்லூரிக் கல்வி இயக்ககம்,
சென்னை–15.(அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பலாகிறது)

அனுப்பப்பட்டது.
நாள்: 1/9/25